TAMIL.

# Arapalisura SathakaM.

முருகன் துணை.

3L9
L9

அம்பலவாணக்கவிராயர் அவர்கள்

பாடிய

# சதுரகிரி

# அறப்பளீசுர சதகம்.

கொண்ணூர்.

கந்தசாமி முதலியார்

அவர்களாற்றமது,

சென்னை அப்பர் விலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

சுத்தப் பதிப்பு] 1918. [விலை அணா-4.



183459

133
170 [1]

உ

கணபதி துணை.

# அறப்பளீசுர சதகம்.

15 JAN 1919

## காப்பு.

### வெண்பா.

உம்பர்கோ னெம்பெருமா னேங்கறப்பளீ சுரன்மேற்
பைம்பொருள் சேருஞ்சதகம் பாடவே—அம்புவியோர்
ஆக்குந் துதிக்கையுளா னன்புடையார்க் கின்பருளிக்
காக்குந் துதிக்கையுளான் காப்பு.

---

கடலுலகில் வாழுமுயி ரெழுபிறப் பினுண்மிக்க
காட்சிபெறு நரசென்ம மாய்க்
கருதப் பிறந்தலரி ததினுமுயா சாதியிற்
கற்புவழி வருவ லரிது
வடிவமுட னவயவங் குறையாது பிழையாது
வருதலது தனினு மரிது
வந்தாலு மிதுபுண்ய மிதுபாவ மென்றெண்ணி
மாசில்வழி நிற்ற லரிது
நெடியதன வானுத லரித்தினி ரக்கமுள
நெஞ்சினே னுதலரிது
நேயமுட னுன்பதத் தன்பனாய் வருதலிந்
நீலனிலத் ததினு மரிதாம்
அடியவர்க் கமுதமே மோழைபூ பதிபெற்ற
வதியென தருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவ னே. 1

## மனையாட்டி சிறப்பு.

கணவனுக் கினியவளாய் பருதுபாஷி யாய்மிக்க
கமலநிக ரூபவதியாய்க்
காய்சினமி லாளுமாய் நோய்பழிவி லாததோர்
கால்வழியில் வந்தவளுமாய்
மணமிக்க நாணமட மச்சம் பயிர்ப்பென்ன
வருமினிய மார்க்கவதியாய்
மாமிமா மற்கிதஞ் செய்பவளு மாய்வாசல்
வருவிருந் தோம்பு பவளாய்
இணையில்மகிழ்நன்சொல்வழிநிற்பவளுமாம்*வந்தி
யென்பெயரி லாதவளுமாய்
யிரதியென லேலீலை புரிபவளு மாய்ப்பிறந்த
மிவ்வழிசெலாத வளுமாய்
அணியிழையொருத்தியுண் டாயினவள்கற்புடைய
ளாகுமென தருமைமதவே
ளனுதினமு மனதினிணை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 2

## நன்மக்கட் பேறு.

தன்குலம் விளங்கிடப் பெரியோர்கள் செய்துவரு
தருமங்கள் செய்து வாலுந்
தன்மமிகு தானங்கள் செய்தாலுங் கனயோக
சாதகனெனப் படுதலும்
மங்குமத லிலாததன் றந்தைதாய் குருமொழி
மாறுதுவழி படுசெயலும்
வழிவழி வருந்தமது தேவதா பத்திபுரி
மார்க்கமுந் தீர்க்காயுளும்
இங்கித குணங்களும் வித்தையும் பத்தியு
மீகையுஞ் சன்மார்க்கமு
மிவையெலா முடையவன் புதல்வனு மவனையே
யீன்றவன் புண்ய வானும்

* வந்தி-மலடி.

அங்கச * விரோதியே சோதியே நீதியே
சரசனெம தருமைமதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 3

## சகோதரரொருமை.

கூடப் பிறந்தவர்க் கெய்துதுயர் தமதுதுயர்
கொள்சுகந் தஞ்சுகமெனக்
கொண்டுதாந்தேடுபொரு ளவர்தேடுபொருளவ
கோதில்புகழ் தம்புகழெனத் [ர்கொள்
தேடுற்ற வவர்நிந்தை தந்நிந்தை தந்தயந்
தீதிலவர் தவமாமெனச்
சிவனென் றுடல்வேடி வர்க்கென்னவைந்தலைச்
சீறரவ மணிலாய்தொறும்
கூடுற்றவிரையெடுத் தோருடனிறைந்திடுங்
கொள்கைபோற் பிரிவின்றியே
கூடிவாழ் பவர்தம்மை பேசகோ தரனெனச்
கூறுவது வேதருமமாம்
ஆடிச்சிவந்தசெங் தாமரைப்பாதனே
யண்ணலெம தருமைமதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 4

## சற்குருவியல்பு.

வெதாந்த சித்தாந்த வழிதெரிந் தாசார
விவரவிஞ் ஞான பூரண
வித்யாவி சேஷசத் குணசத்ய சம்பன்ன
வீரவை ராக்கிய முக்கிய
சாதாரணப்பிரிய யோகமார்க் காதிக்ய
சமாதி நிஷ்டானு பவராய்ச்
சட்சமய நிலைமையும் பரமந்தர
தருமமும் பர சமயமும்

---

* அங்கசன் - மன்மதன்

நீதியி லுணர்ந்துதத் துவமார்க ராய்ப்பிரம
நிலைகண்டு பாச மிலராய்
நித்தியா னந்தசை தன்யரா யாசையறு
நெறியிலோர் சற்குருவராம்
ஆதாரமாயுயிர்க் குயிராகி யெவையுமா
மமலனே தருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 5

## நன்மாணாக்க ரியல்பு.

வைதாலு மோர்கொடுமை செய்தாலுமோசீறி
மாறா திகழ்ந்தாலுமோ
மனதுசற் றுகிலுங் கோணாது நாணாது
மாதா பிதாவெனக்குப்
பொய்யாம னீயென்று கனிவொடும் பணிவிடை
புரிந்து பொருளுடலாவியும்
புனிதவன் றனதெனத் தத்தஞ்செய் திரவுபகல்
போற்றி மலரடியில் வீழ்ந்து
மெய்யாக வேபரவி யுபதேச மதுபெற
விரும்புவோர் சற்சீடராம்
வினைவே ரறும்படி யவர்க்கருள் செய்திடுவதே
மிக்கதே சிகரது கடன்
ஐயா புரம் * பொடிபடச் செய்த செம்மலே
யண்ணலே தருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 6

## பொருள் செயல்வகை.

புண்ணிய வசத்தினால் செல்வமது வரவேண்டும்
பொருளை ரட்சிக்கவேண்டும்
புத்தியுடனதுவொன்று நூறாகவேசெய்து
போதவும் வளர்க்க வேண்டும்

* புரம் - திரிபுரம்.

உண்ணவேண்டும் பின்பு நல்லவஸ்த் ராபரண
　　முடனிற் றரிக்கவேண்டு
　முற்றபெரியோர் கவிஞா தமராதுலர்க் *குதவி
　　யோங்குபுகழ் தேடவேண்டும்
மண்ணில்வெகு தருமங்கள் செயவேண்டுமுயர்
　　வழிதேட வேண்டு மன்றி　[மோக்ஷ
　வறிதிற் புதைத்துவைத் தியாகபேர்களே
　　மார்க்கமறி யாக் குருடராம்
அண்ணலே கங்கா குலத்தலைவன் மோழைதரு
　　மழகனெம தருமைமதவே
　ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
　　ரறப்பளீ சுரதேவனே.　7

## தீவழிவிலக்கு.

வஞ்சகர் தமைக்கூடி மருவொணா தன்பிலார்
　　வாசலிற் செல்லொணாது
　வாதெவ ரிடத்திலும் புரியொணா தறிவிலா
　　மடையர்முன் னிற்கொணாது
கொஞ்சமேனுந்தீது செய்யொணா தொருவர்மேற்
　　குற்றஞ்சொல்லொணா தயற்
　கோதையர்க ளோடுபரி காசஞ்செ யொண்
　　கோளுரைகள் பேசொணாது　[ணாது
நஞ்சுதரு மரவொடும் பழகொணா திருள்வழி
　　நடந்து தனி யேகொணாது
　நதிபெருங் காசினதி னீஞ்சள் செய்யொண்
　　நல்வழி மறக்கொணாது　[ணாது
அஞ்சாம லரசர்முன் பேசொணா திவையெலா
　　மரியுமெம தருமை மதவே
　ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
　　ரறப்பளீ சுரதேவனே.　8

* ஆதுலர் - தரித்திரர்.

## என்றற்கொன்றழகுசெய்வன.

வாழ்மனை தன்க்கழகு குலமங்கை குலமங்கை
வாழ்வினுக் கழகு சிறுவர்
வளர்சிறுவ ருக்கழகு கல்விகள் விக்கழகு
மாநிலந் துதிசெய் குணமாம்
சூழ்குண மதற்கழகு பேரறிவுபேரறிவு
தோன்றிடி லதற் கழகுதான்
றாயதப மேன்மையுப காரம்விர தம்மெருமை
சொல்லறிய பெரியோர் களைத்
தாழ்தல்பணி விடைபுரிதற் சீலமே சங்கருணை
சாற்றுமிவை யாமென்பர் காண்
சௌரி * மலரோனமரர் முனிவர் முச்சுடரே
சரணமெமை ரட்சி யெனவே [லாஞ்
ஆழ்கடலுதித்தவரு விடமுண்ட கண்டனே
யண்ணலெம தருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 9

## ஒன்றில்லாமையாற் பயன்படாதவை.

கோவிலில்லாதவூர் நாசியில்லாமுகங்
கொழுநனில் லாத மடவர்
குணமதில் லர்வித்தை மணமதில் லாதமலர்
குஞ்சரமி லாத சேனை
காவலில் லாதபயிர் பாலரில்லாதமனை
கதிர்மதியி லாத வானம்
கவிஞரில் லாதசபை சுதிலயை யிலாதபண்
காவலரி லாத தேசம்
ஈவதில் லாததன நியமமில் லாதசெப
மிதசலவண மில்லாத வூ
ணிச்சையில் லாதபெண் போகமல மிவைதம்மி
னேதுபல னுண்டு கண்டாய்

---

* சௌரி-விட்டுணு

ஆவியனை யாட்குடந் தந்தவா கற்பற்கு
வாகுமெம தருமை மதவே
எனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 10

## ஒன்றிற்கொன்று தகாதசேர்க்கை.

பூததயை யில்லாத லோபியரிடத்திலே
பொருளையரு ளிச்செய்தனை
புண்ணியஞ் செய்கின்ற சற்சன ரிடத்திலே
பொல்லாத மிடி * வைத்தனை
நீதியகன் மூடர்க் கருந்ததி யெனத்தக்க
நெறிமா ரைத் தந்தனை
நிதானமுள வுத்தமர்க் கிங்கித மிலாதகொடு
நீலியைச் சேர் வித்தனை
சாதியி லுயர்ந்தபே ரீனர்பின் னேசென்று
தாழ்ந்துபர வச்செய்தனை
தமிழருமை யறியாத புலவர்மேற் கவிவானர்
தாம்பாடவே செய்தனை
ஆதரவிலாமலிப் படிசெய்த தென்சொலா
கமலனே யருமை மதவே
எனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 11

## குணக்கேட ரியல்பு.

மாறுத கலைகற்று நிலைபெற்ற சபையிலே
வாயிலா தவனொரு பதர்
வாள்பிடித் தெதிரிவரி னோடிப் பதிங்கிடு
மனக்கோழை தானொரு பதர்
ஏறு வழக்குரைத் தனைவருஞ் சிசியென்
றிகழப் பானொருபதர்
றில்லாள் புறஞ்சொலச் சம்மதித் தவளோ
டிணங்கிவாழ் பவனொரு பதர்

* மிடி-வறுமை.

வேறொருவர் மெச்சாது தன்னையே தான்மெச்சி
வீண்பேசு வாரொரு பதர்
வேசையர்களாசைகொண்டுள்ளளவு மனையாளை
விட்டுவிடு வாரொரு பதர்
ஆறாத துயரையும் மிடியையுந் தீர்த்தருள்செ
யமலனே தருமை மதவே
ளனுதினமுமனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீசுரதேவனே. 12

## செயத்தக்கவை.

வாலிபந் தனில்வித்தை கற்கவேண்டுங்கற்ற
வழியிலே நிற்க வேண்டும்
வனைகடந் திரிந்துபொரு டேடவேண் டுந்தேடி
வளறாஞ் செய்யவேண்டும்
சீலமுடை யோர்களைச் சேரவேண்டும் பிரிதல்
செய்யா திருக்கவேண்டுஞ்
செந்தமிழ்ப் பாடல்பல கொள்ளவேண்டுங்
த்யாகங் கொடுக்க வேண்டும் [கொண்
ஞாலமிசை பலதரும நாட்டவேண்டும்நாட்டி
நன்றாய் நடக்க வேண்டும்
நம்பனினை யடிபூசை பண்ணவேண்டும் பண்ணி
னுலுமிகு பத்தி வேண்டும்
ஆலமமர் கண்டனே பூதியணி * முண்டனே
யனகனே தருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 13

## மேன்மேலுயர்ச்சி.

தனமட்டிலிரவாது சீவனஞ் செய்பவன்
சாமர்த்திய முள புருடனுஞ்
சந்ததம் பதின்பரைங் காப்பாற்றுவோன்மிக்க
தரணிபுகழ் தரு தேவனும்

* முண்டம்-நெற்றி.

பொன்மட்டி லாமலீந் தொருநூறு பேரைப்
புரப்பவன் பொருவி லிந்த்ரன்
புவிமீதி லாயிரம் பேர்தமைக் காப்பாற்று
புண்யவானே பிரமனும்
நன்மைதரு பதினாயிரம்பேர் தமைக்காத்து
ரட்சிப்ப வன்செங்கண்மா
லுமிவன்மேவதிக மாகவெகு பேர்க்குதவு
நானே மகா தேவனும்
அன்மட்டு * வார்குழலி பாகனே யோகனே
டண்ணலெம தருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 14

## செயற்கருமஞ் செயல்.

நீர்மேனடக்கலா மெட்டியிந் தின்னலா
நெருப்பை நீர்போற் செய்யலாம்
நெடியபெரு வேங்கையைக் கட்டியே தழுவலா
நீளரவினைப் பூணலாம்
பார்மீது மணலைச் சமைக்கலாஞ் சோறெனப்
பட்சமுடனே யுண்ணலாம்
பாணமொடு குண்டுவிலக்கச் செய்யலா மரப்
பாவைபேசப் பண்ணலாம்
ஏர்மேவு காடியுங் கடையுற்று வெண்ணெயு
மெடுக்கலாம் புத்தி சற்று
மில்லாத மூடர்தமனத்தைத் திருப்பவே
யெவருக்கு முடியாதுகாண்
ஆர்மேவு கொன்றைபுனை வேணியா சுரர்பரவு
மமலனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்ளீ சுரதேவனே. 15

* அல்-இருள்-மட்டு-தேன்.

## உத்தமராவோர்.

செய்நன்றி மறவாதபேர்களு மொருவர்செய்
தீமையை மறந்தபேருந்
திரவியந் தரவரினு மொருவர் மனையாட்டிமேற்
சித்தம் வையாதபேரும்
கைகண்டெடுத்தபொருள் கொண்டுபோய்க்
கையிற்கொடுத்தபேருங் [பொருளாளர்
காசினியி லொருவர்செய் தருமங்கெடாதபடி
காத்தருள் செய்கின்றபேரும்
பொய்யொன்று நிதிகோடி வரினும் வழக்கழிவு
புகலாத நிலைகொள் பேரும்
புவிமீது தலைபோகு மென்னினுங் கனவிலும்
பொய்மையுரை யாதபேரும்
ஐயவிங் கிவரெலாஞ் சற்புருடரென் றுலகி
லகமகிழ்வ ரருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 16

## இதுவுமது.

அடைக்கல மெனத்தேடி வருவோர் தமைக்
வவனே மகாபுருடனு [காக்கு
மஞ்சாம லெதுவரினு மெதுபோகி னுஞ்சித்த
மசைவிலான் மகாதீரனும்
தொடுத்தொன்று சொன்னசொற் றப்பாதுசெய்
தோன்றலே மகாராஜனுங் [கின்ற
தூறிக் கலைக்கின்ற பேர்வார்த்தை கேளாத
துரையே மகா மேருவாம்
அடுக்கின்ற பேர்க்குவரு மிடர்தீர்த் திரட்சிக்கு
மவனே மகாத்யாகிய
மவரவர் தராதர மறிந்துமறி யாதைசெயு
மவனே மகாவுசிதனும்

அடர்க்கின்ற முத்தலைச் சூலனே லோலனே
யமலனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீசுர தேவனே. 17

## ஒன்றிலொன்றில்லாமை.

காமிக்கு முறையில்லை வேசைக்கு நாணில்லை
கயவர்க்கு மேன்மை யில்லை
கன்னமிடு கள்வருக் கிருளில்லை விபசார
கன்னியர்க் காணையில்லை
காமெனுமயக்கமருந் தோங்குபெரியோர்க்குவரு
ஜாதிகுல மென்பதில்லை
தாக்ஷிணிய முடையபேர்க் கிகலில்லை யெங்கு
சார்பிலார்க் கிடமதில்லை [மொரு
பூமிக்குளீயாத லோபர்க்கு வளமான
புகழென்ப தொன்று மில்லை
புலையர்க்குநிசமில்லை கைப்பொருளிலாதவோர்
புருடருக் கொன்றுமில்லை
யாமினி * தனக்கு நிகர் கந்தரத் திறைவனே
யன்புடைய வருமைமதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீசுரதேவனே. 18

## யாக்கை நிலையாமை முதலியவை.

காயமொருபுற்புதம் வாழ்வுமலை சூழ்தருங்
காட்டிலாற் றின் பெருக்காங்
கருணை தரு புதல்வர்கிளை மனைமனைவி யிவையெ
கானல்காட் டும்ப்ர வாகம் [லாங்
மேயபுஜ பலவலுமை யிளமையழ கிவையெலாம்
வெயின்மஞ்ச ளுயிர்தானுமே

* யாமினி-இராத்திரி

வெட்டவெளி தனில்வைத்த தியமெனவேகருதி
 வீண்பொழுது போக்காமலே
நேயமுடனேதெளிந் தன்பொடுன் பாதத்தி
 னினைவுவைத் திருபோதினு
நீர்கொண்டு மலர்கொண்டு பரிவுகொண்டர்ச்சிக்க
 நிமலனே யருள் புருகுவாய்
ஆயுமறி வாளர்பணி பாதனே போதனே
 எண்ணலெம தருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
 ரறப்பளீசுரதேவனே. 19

## திருமங்கையிருப்பிடம்.

நற்பரி முகத்திலே மன்னவ ரிடத்திலே
 நாகரிகர் வாழ மனையிலே
நளினமலர் தன்னிலே கூவிளந் தருவிலே
 நறைகொண்ட பைந் துளவிலே
கற்புடையர் வடிவிலே கடலிலே கொடியிலே
 கலியாண வாயிறனிலே
கடிநகரிடத்திலே நற்சேகநெல் விளைவிலே
 கதிர்பெறு விளக்கதனிலே
பொற்புடைய சங்கிலே மிக்கோர்கள் வாக்கிலே
 பொய்யாத பேர் பாலிலே
பூந்தடந்தன்னிலே பாற்குடத் திடையில்
 போதகத்தின் சிரசிலே
அற் *பெருங்கோதைமலர்மங்கைவாழிடமென்ப
 ரண்ணலெம தருமைமதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
 ரறப்பளீசுர தேவனே. 20

* அல்-பெருமை.

## மூதேவியிருப்பிடம்.

மிதமின்றியன்னம் புசிப்போ ரிடத்திலும்
மிருபாஷை யோரிடத்திலும்
மெய்யொன்றிலாமலே பொய்பேசியேதிரியு
மிக்கபாதக ரிடத்தும்
கதியொன் றுமிலர்போல மலினங்கொளும்பழைய
கந்தையணிவோரிடத்துங்
கடிநாயெனச்சீறி யெவரையுஞ் சேர்க்காத
கன்னிவாழ் மனை யகத்தும்
ததி * சேர்கடந்திலுங் காத்தபத் திடையிலுஞ்
சார்ந்தவாட்டின் றிரளிலுஞ்
சாம்பிண முகத்திலும் மிவையெலாங் கவலைபுரி
தௌவை 0 வாழிடமென்பர் காண்
அதிரூப மலைமங்கை நேசனே மோழைதரு
மழகனெம தருமைமதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீசுர தேவனே. 21

## குணகுணமிரண்டினும் பயன்படாமை.

குணமற்றபேயமுறுங்கைத்தழைதழைத்ததென்ன
குட்டநோய் கொண்டுமென்ன
குரைக்கின்ற நாய்மடி சுரந்தென்ன சுரவாது
கொஞ்சமாய்ப் போகிலென்ன
மணமற்ற செம்முருக் கதுபூத் தலர்ந்தென்ன
வலராது போகிலென்ன
மதுரமில்லாவுவர்க் கடனீர் கறுத்தென்ன
மரதெண்மை யாகிலென்ன
உணவற்ற பேய்ச்சுரை படர்ந்தென்ன படரா
துலர்ந்துதான் போகிலென்ன

* ததி-தயிர் 0 தௌவை-மூதேவி.

வுதவாதபேர்க்கு வாழ்வுவந் தாலென்ன
வோங்குமிடி வரிலென்ன காண்
அணியுற்ற பைங்கொன்றை மாலிகா பரணனே
யாதியே ரருமைமதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 22

## குறைவுற்றுங் குணங்கெடாமை.

தறிபட்ட சந்தனக் கட்டைபழு தாயினுஞ்
சார்மணம் பழுதாகுமோ
தக்கபால் சுவரிடக் காய்ச்சினும் மதுகொண்டு
சாரமதுரங் குறையுமோ
நிறைபட்ட கதிர்மணி யழுக்கடைந் தாலுமதி
னீள்குண மழுங்கி விடுமோ
நெருப்பிடை யுருக்கினு மடிக்கினுந் தங்கத்தி
னிறையுமாற் றுக்குறையுமோ
கறை * பட்டபைம்புயன்மறைத்தாலுமதுகொண்
கதிர்மதி கனம்போகுமோ
கற்றபெரி யோர்மகிமை யற்றபாடி கிலரேனுங்
காசினி தனிற் போகுமோ
அறிவுற்ற பேரைவிட் டகலாத மூர்த்தியே
யையனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 23

## இதற்குதவிசெய்வ திதுவெனல்.

வானவர் பிதிர்க்கண்முச் சுடர்மூவர்கோள்கட்கும்
வாழ்வுதரு முதவி புவனம்
வளமிக்க புவனந் தனக்குமேன் மேலுதவி
வாழ்வுபெற் றிடுமென்னராம்

---

* கறை-இருல்.

தேனமவர்நறுந்தொடையல்புனைமன்னவர்க்குதவி
சேர்ந்தகுடி படைவர்க்கமாஞ்
சேர்குடி படைக்குதவி வினைபயிர் பயிர்குதவி
சீர்பெற வழங்கு மறையாம்
மேனியிர் மழைக்குதவி மடமாதர் கற்பொன்று
வேந்தர்தந் நீதியொன்று
வேசிய ரொழுக்கமென் றிம்மூன்றுமே யென்று
மிக்கபெரியோருரைசெய்வார்
ஆன 0 மர்நெடுங்கொடி யயர்த்தவெம்மிறைவனே
யதிபனே யருமைமதவே
ளனுதினமு மனதினினே தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 24

இதனைக்கண்டு மகிழ்வதிதுவெனல்,

தந்தைதாய் மலர்முகங் கண்டுநின் றுலிப்ப *
தவாதந்த சந்ததிபாதஞ்
சந்த்ரோதயங்கண்டு பூரிப்பதுயர்வாவி
தங்குபைங் குமுத மலராம்
புந்திமகிழ் வாயிரவி வருதல்கண் டகமகிழ்வ
பொங்குதாமரை மலர்களாம்
போதவும் புயல்கண்டு கண்களித்தோநடம்
புரிவது மயூர வினமாம்
சிந்தைமகிழ் வாயுதவு தாதா வினைக்கண்டு
சீர்பெறுவ திரவலர் குழாந்
திகழ்நீதி மன்னரைக் கண்டுகளி கூர்வதிச்
செகமெலா மென்பர் கண்டாய்
அந்தியம் வானனைய செஞ்சடா டவியனே
யமலனே யருமைமதவே
ளனுதினமு மனதினினே தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவ னே. 25

0 ஆன்-இடபம். * ஆலிப்பது-களிப்பது.

## அரவதுவாகாமை.

உள்ளன்பி லாதபேர் தித்திக்கவேபேசி
யுறவாடு முறவு முறவோ
உபசரித் தன்புடன் பறிமாறி டாதசோ
றுண்டவர்க் கன்ன மாமோ
தள்ளா திருந்துகொண் டொருவர்போய்ப் பார்
தக்கபயிர் பயிராகுமோ [த்துவரு
தளகர்த்த னொருவனில்லாமுன் சென்றிடுஞ்
தானையுந் தானையாமோ
விள்ளாத போகமில்லாதபெண் மேல்வரு
விருப்பமும் விருப்பமாமோ
வெருகடன் பட்டபேர் செய்கின்ற சீவனமு
மிக்கசீவன மாகுமே
அள்ளா * திருங்கருணை யாளனே தேவர்தொழு
மாதியே யருமை மதவே
எனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 26

## நற்குணங்களுக்கிடமாகாதவர்.

வெறிகொண்ட மற்கடம் 0 பேய்கொண்டு கள்ளு
வெங்காஞ் சொறிப் பதறிலே
வீழ்ந்துதேள் கொட்டிடச் சன்மார்க்கமெள்ள
மெதுவமோ மேவாதபேரில் [ளவு
குறைகின்ற புத்தியா யகிலற்ப சாதியாய்க்
கூடவே யிளமை யுண்டாய்க்
கொஞ்சமா மதிகார முங்கிடைத் தான்மிக்க
குவலயந் தனிலவர்க்கு
நிறைகின்ற பத்தியுஞ்சீலமும் மேன்மையு
நிதானமும் பெரியோர்கண்மே

* அள்ளாது-குறைபாது. 0 மற்கடம் குரங்கு.

னேசமும் மீசையுந் துவையெலாங் கனவிலு
நினைவினும் வராது கண்டாய்
அறைகின்ற சுருதியின் பொருளான வள்ளலே
யண்ணலே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 27

## இதனலின்னமுறையறுவெனல்.

தன்னுன் முடிக்கவொண் ணுதகா ரியம்வந்து
தான்முடிப் போன் றமையனுந்
தன்றலைக் கிடர்வந்த போதுமீட் டுதவுவோன்
றாய்தந்தை யென்ன லாகும்
ஒன்ருச் செயுங்கொடுமை யான்மெலிவு வந்தபோ
ததவுவோ னிட்டதெய்வம்
யுத்திபுத்திகள்சொல்லி மேல்வருங்காரிய
முரைப்பவன் குருவென்னலாம்
எந்நாளும்வருநன்மை தீமைதனதென்னவவ
பெண்ணிவரு வோன்பந்துவா
மிருதய மறிந்துதன் சொற்படி நடக்குமவ
னெவனெனினு மவனே சுதன்
அந்நாரம்பணியு மெந்நாளுமே புனையு
மண்ணலே யருமைமதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 28

## அவரவரிடத்து நடக்குமுறை,

மாதா பிதாவினுக் குள்ளன் புடன்களிவு
மாருத நல்லொழுக்கம்
மருவுகுரு வானவர்க் கினியவுப சாரமுள
வார்த்தைவழி பாடடக்கம்

காதாக் +-கருங்கண்மனை யாடனக்கோசயன
காலத்தி னய பாஷணங்
கற்றபெரியோர்முதியர்வருமாதுலர்க் * கெலா
கருணைகே ளருள்வி தானம் ❋
நீதிபெறு மன்னவ ரிடத்ததிக பயவினைய
நெறியுடைய போக கிங்கிதம்
நேயமுள தமர்தமக் ககமகிழ்வுடன் பரிவு
நேரல ரிடத்தில் வயிரம்
ஆதிமனு நூல்சொலும் வழக்கமிது வாகுமெம
தையனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 29

## குணத்தைவிட்டுக் குற்றத்தைக்கவர்தல்,

திட்டவிக டக்கவிதை யாருவே மெச்சுவார்
சொல்லுகற் கவிதை மேச்சரா
துர்ச்சனரக் ககமகிழ்ந் துபசரிப் பார்வருந்
தூயரைத் தள்ளி விடுவார்
இட்டமுள தெய்வந்தனைக்கரு திடார்கறுப் 0
பென்னிலோ காலில் வீழ்வார்
நட்டலா பங்களுக் குள்ளான பந்துவரி
னன்றாகவே பேசிடார்
நாளுமொப் பாரியாய் வந்தபுத் திறவுக்கு
நன்மைபல சேவசெய்குவார்
அட்டதிசை சூழ்புவியி லோங்குகலி மகிமைகா
ணத்தனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 30

+ காது-கொலை *ஆதுலர்-தரித்திரர். ❋ விதானம்-வணக்கம் 0 கறுப்பு-அற்பதேவதை.

## குணங்காண்குறி,

கற்றோர்க ளென்பதைச் சிலமுகி னேசொலுங்
　　கனவாக்கி னாற் காணலாங்
　கற்புளா ரென்பதைப் பார்க்கின்ற பார்வை
　　கானடையி னுங் காணலாம் [யொடு
அற்றோர்க ளென்பதனை யொன்றிலும் வாரா
　　வடக்கத்தி னாலறியலா
　மறமுளோ ரென்பதைப் பூததயை யென்னு
　　யதுகண்டு தானறியலாம் [நிலை
வித்தோங்கு பயிரைக் கிளைத்துவரு தடியினால்
　　விளையுமென் றே யறியலாம்
　வீரமுடை யோரென்ப தோங்கிவரு தைரிய
　　விசேடத்தி னாலறியலாம்
அத்தா குணத்தினாற் குவாலங் தெரியலா
　　மண்ணலே யருமை மதவே
　ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
　　ரறப்பளீ சுரதேவனே. 31

## கூடிற்பயன்படல்,

செத்தைபல கூடியொரு கயிறாயி னதுகண்டு
　　திண்கரியை யுங்கட்டலாந்
　திகழ்ந்தபல துளிகூடி யாறன்வாவியொடு
　　திரளேரி நிறைவிக்கலாம்
ஒத்தநுண் பஞ்சுபல சேர்ந்துநூலாடி
　　னுடுத்திக் கலையாக்கலா
　மோங்கிவரு கோலுடன் சீலையையுங் கூடினா
　　லுயர்கவிகை யாக்கொள்ளலாம்
மற்றுமுயா தண்டுலத் தோடுதவிடுமிகூடின்
　　மல்குமுளை விளைவிக்கலாம்

மீனமொத்த நேயமொடு கூடியொரு வர்க்
வாழின்வெகு வெற்றி பெறலாம் [கொரு
அற்றசனி யைப்பொருத் தரிபுரமர் தேடரிய
வமலே யருமை மதவே
எனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 32

## அத்தற்கு வெற்றியிடம்,

கலைவலா ருக்கதிக சமயமதுர வாக்கிலே
காமுகர்க் கதிக சயமோ
கைப்பொருளி லேவரு மருத்துவர்க் * கோ
கைவிசேடந் தன்னிலே [சயங்
நலமுடைய வேசையர்க் கழகிலே யரசர்க்கு
நாளும்ரண சூரத்திலே
கற்றவர்க் கதிகசய முலகுபுகழ் பொறையிலே
ஞானவேதியர் தமக்கே
குலமகிதய தன்னிலே தவசியர்க் கோசயங்
கூறியதுலாக் கோலிலே
குற்றமில் லாதவேளாளருக் கோசயங்
குறையாத கொழு 0 மேழியிலே
அலைவில்குதிரைக்கு நடை வேகத்தி லதிகசெய
மாமென்பதருமை மதவே
எனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 33

## ஒன்றில்லாமையாற் பாழ்படல்,

தாம்பூல தாகரண மிலாததே வருபூர்ண
சந்த்ரனிர் முக சூனியஞ்
சற்சன ரிலாததே வெகுசனஞ் சேர்ந்துவாழ்
தரும்பெரிய நகர் சூனியஞ்

---

*மருத்துவர்-வைத்தியர். 0கொழு-காறு

யேம்பாடிலாதமன் னவர்கள்வந் தாள்வதே
மிக்கதே சச்சூனியம்
மிக்கசற புத்திர னிலாததே னலமான
வீறுசேர்க்கரக சூனியம்
சோம்பாத தலைவரில் லாததே வளமுடன்
சொல்லுயர் சபா சூனியந்
தொல்லுலகி லெவர்க்கு மாகிநிய மில்லாததே
சுத்தசூ னியமென்பர் காண்
ஆம்பல்வத னத்தலைக் குகனைவின் றருள்செய்த
வத்தனே யருமை மதவே
எனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 34

## மூடர்தாரதன்மியம்,

பெண்புத்தி கேட்கின்றமூடருந் தந்தையாய்ப்
பிழையுறஞ்சொலு மூடரும்
பெரியோர்கள் சபையிலே முகடேறி * வந்தது
பிதற்றிடும் பெரு மூடரும்
பண்புற்ற சுற்றஞ் சிரிக்கவே யிழிவான
பழிதொழில் செய்திடு மூடரும்
பற்றற்ற யோக்குமுன் பிணைகின்ற பின்பு
பாதகித்திடு மூடரும் [போய்ப்
கண்கெட்ட மாடென்ன வோடியிர வலர்மீது
காய்ந்து விழுந்திடு மூடரும்
கற்றறி விலாதமுழு மூடருக் கிவரெலாங்
கான்மூட ரரை மூடர்காண்
அன் 0 கற்ற நாவலர்க் காகவே தூதுபோ
மையனே யருமை மதவே
எனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 35

* முகடு-முக்கிய இடம் 0அண்-மேன்மை.

## இதற்கிதுவேண்டு மெனல்,

தனக்குவெகு புத்தியுண்டாகினும் வேறொருவர்
    தம்புத்தி கேட்கவேண்டும்
  தானதிச் சூரனே யாகினுங் கூடவே
    தளசே கரங்கள் வேண்டும்
கனக்கின்ற வித்துவா னாகினுந் தன்னினுங்
    கற்றோரை நத்தவேண்டுங்
  காசினியை யொருகுடையி லாண்டாலும்
    கருத்துள்ள மந்திரி வேண்டும் [வாசலிற்
தொனிக்கின்ற சங்கீத சாமர்த்திய னாகினுஞ்
    சுதிகூட்ட வொருவன் வேண்டுஞ்
  சுடர்விளக் காயினு நன்றாய் விளக்கிடத்
    தூண்டுகோ லொன்று வேண்டும்
அனற்கண்ண னேபடிக சங்கநிகர் வண்ணனே
    யையனே யருமை மதவே
  எனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
    ரறப்பளீ சுரதேவனே. 36

## வறுமையின் கொடுமை,

மேலான சாதியி லுதித்தாலு மதிலென்ன
    வெகுவித்தை கற்று மென்ன
  மிக்கவதி ரூபமொடு சற்குண மிருந்தென்ன
    மிகுமானி யாகிலென்ன
பாலான மொழியுடைய னாயென்ன வாசார
    பானுமிருந்து மென்ன
  பார்மீது வீரமொடு ஞானவா னாயென்ன
    பாக்கிய மிலாதபோது
வாலாய மாய்ப்பெற்ற தாயுஞ் சலித்திடுவள்
    வந்த சுற்றமு மிகழுமே

மரியாதை யில்லாம லெவரும் பேசவர்
மனைவியுர் தூற சொல்வான்
ஆலால முண்டகனி வாயனே சேயனே
யனகனே யருமை மதவே
எனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீசுர தேவனே. 37

## ஈனத்துவம்.

இரப்பவன் புவிமீதி லீனனவ னுக்கில்லை
யெனுமவ னவனிலீன
னீகின்ற பேர்தம்மை யியாம லேகலைத்
திடுமூட னவனி லீனன்
உரைக்கின்ற பேச்சிலே பலனுண் டெனக்காட்டி
யுதவியடா வவனி லீன
னுதவவே வாக்குரைத் தில்லையென் றேசொலு
முலுத்தனே வவனி லீனன்
பரக்கின்ற யாசகர்க் காசைவார்த்தைகள்சொலிப்
பலகா லலைந்து திரியப்
பண்ணியே யில்லையென் றிடுகொடிய பாவியே
பாரிலெல் லோர்க்கு மீனன்
அரக்கி * தழ்க் குமுதவா யுமைநேச னேயெளிய
ரமுதனே யருமை மதவே
எனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 38

## மறைப்பனவும் வெளிப்படுத்துவனவும்,

சென்மித்த வருடமும் முண்டான வத்தமுர்
திதில்கிர கச்சாரமுர்
தின்றவரு மௌடதமு மேலான தேசிகன்
செப்பிய மகா மந்த்ரமும்

* அரக்கு-சிகப்பு.

புன்மையவ மானமுந் தானமும் பைம்பொன்னணி
புனையுமட வார் கல்வியும்
புகழ்மேவு மானமு மிவையொன் பதுந்தமது
புந்திக்குளே வைப்பதே
தன்மமென் றுரைசெய்வ ரொன்னார்கருத்தையுந்
தன்பிணியையும் பசியையும்
தான்செய்த பாவமு மிவையெலாம் வேறொரு
தஞ்செவியில் வைப்ப தியல்பாம் [வர்
அன் * மருவு கண்டனே மூன்றுலகு மீன்றவுமை
யன்பனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 39

## தேவர்கள் காலவளவை.

சதுரயுக மோரிரண் டாயிரம் பிறபடிற்
சதுமுகற் கொரு தினமதாஞ்
சாற்றுமத் தினமொன் றிலேயிந்த்ர பட்டங்க
டாமுமீ ரேழ் சென்றிடும்
மதிமலியு மித்தொகையி னயனுயு ளூறுபோய்
மாண்டபோ தொரு கற்பமாம்
மாறிவரு கற்பமொரு கோடிசென் றிடினெடிய
மாறனக்கோர் தினமதாம்
அதிபரவு மித்தொகையி லொருகோடி கெடியமா
றொன்றியே போய்மறைந்தா
றுலகையோர் பரமனே சீகைத் தனிமுடி
தளைக்கிடுங் காலமென்பார்
அதிகமுள பலதேவர் தேவனே தேவர்கட்
கரசனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 40

* அல்-மருவு.

## தூய்மையிடமும் தூய்மைசெய்வனவும்.

வாம்பரி தனக்கதிக புனிதமுக மதனிலே
    மறையவர்க் குயர் புனிதமோ
  மலரடியி லேபுனித மொளிகொள்கண் ணாடிக்கு
    மாசின்முற் புறமதனிலே
மேம்படும் பசுவினுக் குப்பிற் புறத்திலே
    மிக்கமட மாத ருக்கோ
  மேனியெல் லாம்புனித் தாகுமா சௌசமொடு
    மேவுவனி தையர் தமக்குந்
தாம்பிரம தற்குமிகு வெள்ளிவெண் கலமயந்
    தங்கமீ யத்த மக்கும்
  தரும்புனிதம் வருபெருக் கொடுபிளிதணஞ்சா
    சாருமண் டாதி சாணம் [ம்பல்
ஆம்புனித மிவையென்பர் மாமேரு வில்லியே
    யன்பனே யருமை மதவே
  ளனுதினமு மனதினிலி ருசதுர கிரியவ
    றப்பளீசுர தேவனே. 41

## அடங்காதவற்றை யடக்குமுபாயம்.

கொடியபுலி பெருமைபெறு மூக்கினுங் கயிறென்று
    கோத்துவச விர்த்தி கொள்வார்
  குவலயத் தனின்மதக் களிறதனை யங்குசங்
    கொண்டுவச விர்த்தி கொள்வார்
படியில்விட வரவை மந்திரதந் திரத்தினாற்
    பற்றிவச விர்த்தி கொள்வார்
  பாய்பரியை நெடியகடி வாளமது கொடுகடை
    பழக்கிவச விர்த்தி கொள்வார்
விடமுடைய துட்டரைச் சோர்பந் தனைக்கொண்
    வீசிவச விர்த்தி கொள்வார்

மிக்கபெரி யோர்களுங் கோபத்தை யறிவால்
விலக்கிவச விர்த்தி கொள்வார்
அடியவர் துதிசெவரு சோர்தா மரைப்பதத்
தையனே யருமை மதவே
எனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 42

## ஒளியினுயர்வு.

செழுமணிக் கொளியதன் மட்டிலே யதினுமோ
செய்யச் சோத * மினவே
செப்பிடுங் கிருமிக்கு மிச்சமொளி யதனினுந்
தீபத்தி னொளி யதிகமாம்
பழுதிலாத் தீவர்த்தி தீபத்தி னதிகமாம்
பகல்வர்த்தி யதி லதிகமாம்
பரமத் தாப்பினொளி யதிலதிக மதினுமோ
பனிமதிக் கொளி யதிகமாம்
விழைவுதரு பரிதிக்கு மனுநீதி மன்னருக்கும்
விரவித ரணிக ருக்கும்
மிக்கவொளி திசைதோறும்போய்விளங்கிடுமெ
விருளோ ருலை செய்குவர் [ன்ன
அழவில்விழிகொடெரிசெய்தமதனவேட்கைவென்
வண்ணலே யருமைமதவே [ற
எனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 43

## குணங்குற்றமாதல்.

வான்மதியைப் நோக்கிடிற் சோரர்கா முகருக்கு
மாருத வல் விடமதாம்
மகிழ்நன் றினைக்காணி லிதமிலா விபசரிய
மாதருக்கோ விடமதாம்

* கச்சோதம்-மின்மினி.

மேன்மைதரு கற்சுவை பதார்த்தமுஞ் சுரரோக
மிக்கபேர்க் கதிக விடமாம்
வித்தியா திபர்தமைக் கண்டபோ ததிலோப
வீணர்க் கெலாம் விடமதாம்
சனயிரு புன்கவிக லோக்கதிக சபைகாணி
லெலாத கொடிய விடமா
மேற்றமில் லாதபடு பரிகட் கறமென்னி
லெக்காளு மதிக விடமாம்
ஆனதவ யோகியர்க ளிதயதா மறையுறைபு
மண்ணலே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீசுரதேவனே. 44

## உயர்வன்றித் தாழ்வும் சிறக்குமிடம்.

வெகுமான மாகிலும் மவமான மாகிலும்
மேன்மையோர் செய்யி லழகாம்
விரகமே யாகிலுஞ் சரசமே யாகிலும்
விழைமங்கை செய்யி லழகாம்
தருதாழ்வு வாழ்வுவெகு தருமங்க ளைச்செய்து
சாரிலோ பேரழக தாஞ்
சீரத்தி லோருன் மானமது வாகினுஞ்
சமர்செய்து வரிலழக தாம்
நகமேவு மதமரியி லேறினுந் தவறினு
நாளுமது வோரழக தாம்
காப்பீதி லேறினும் விழினுங் கண்டபேர்
நகைசெய்தழ கன்றென்பர்காண்
அகமாயு கற்றவர்க் கருள்புரி மையனே
பதிபனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீசுரதேவனே. 45

## நல்வினைசெய்தோர்.

சரணெனக் காத்தவன் மெய்யினால் வென்றவன்
 றனதிலை யாதுதவினோன்
நந்தைசொன் மறாதவன் முன்னமற் றானவன்
 றுப்பழி துடைத்த நெடியோன்
வருபிதிர்க் குதவினோன்றெய்வமே துணையென்று
 வமர்தனை மனைவியை வதைத்தோன்
மாறான தந்தைத் தமையனைப் பிழைகண்டு
 மாய்த்துலகின் மகிமை பெற்றோன்
கருதரிய அரிச்சந்திரன் மாபலி
 கனிச்சியோன் சமுத்திரை சதன்
கருடன் பகிரதனுடன்சிறுத் தொண்டனொடு
 கானவன் பிரகலாதன்
அரியவல் விபீஷணனெனுமகா புருடரா
 மத்தனே யருமை மதவே
எனுதினமு மன்னினிய தருசதுர கிரிவா
 ரறப்பளீசுர தேவனே. 46

## தீவினைசெய்தோர்.

வாயிகழ்வு பேசிமிகு வாழ்விழந் தோன்சிவனை
 வைதுதன் றலை போயினோன்
மற்றொருவர் தாரத்தி விச்சைவைத் துடலெலா
 மாறாத வடிவாயினோன்
தாயத்தி னோர்க்குள்ள மங்கைக் கொடாமலே
 சம்பத் திழந்து மாய்ந்தோன்
நக்கபெரி யோர்தமை வணங்கா மதத்தினாற்
 றந்நிலை வாயகன்றோன்
மாயவனைச் சபையதனி னிந்தனைசெய்தோனிகோ
 மணிமுடி துணிந்து மாய்ந்தோன் [னவ

வருகருட னெடுதக்க னயிராவ தன்குருடன்
　　மகன்வெழுதி சிசுபாலனும்
ஆயுமறி வானரொடு தேவர்பணி தானனே
　　யவனிபுக ழருமை மதவே
னனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
　　ரறப்பளி சுரதேவனே. 47

## நன்னகர்.

வாவிபல கூபமுட னறருகு சேர்வதாய்
　　மல்காத வழியிலுளதாய்
வாழைகமுதொடுதெங்குபயிராவதாய்ச்செந்தெ
　　வயல்கள்வாய்க் கால்க ளுளதாய்
வாவிசம லிங்குவளை சேரேரி யுள்ளதாய்
　　கனவர்த்தகர் கண்மறைவலோர்
காணரிய பல்குடிக ணிறைவுள்ள தாய்நல்ல
　　காவல னிருக்கை யுளதாய்த்
தேவரா லயமாடல் பாடலணி மாளிகை
　　சிறக்கவுள தாய்ச் சற்சனர்
சேருமிட மாகுமோ ரூர்கிடைத் ததிலதிக
　　சிவனமு மேடைத்தாகில்
ஆவலொ டித்திடுவ தேசொர்க்க வாசமென்
　　றறையலா மருமை மதவே
னனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
　　ரறப்பளி சுரதேவனே. 48

## தீ நகர்.

சனசா திகள்குடி யிருப்பதாய் முன்வேலி
　　யில்லில்லி னுக்குமுளதா
யிலைமுலை திறந்ததன் தலைவிரித் திடுமாத
　　ரெங்குமட மாட்ட முளதாய்க்
கானமொரு பக்கமாம் மலையோர மாய்முறைக்
　　காய்ச்சறப் பாத கிடமாய்க்

கள்ளர்பய மாய்கொடிய கரிபிட்டி ரைக்கின்ற
சுற்கேணி கீருண்ப தாய்
மானமில்லாக் கொடிய அர்ச்சனர் தமக்கேற்ற
மணியமொன் றுண்டான தாய்
மாநிலத் தோர்தல மிருந்ததனில் பெருவாழ்வு
வாழ்வதினு மரு நாகிலே
ஆஷகெடு நாள்கிடக் தமிழ்தலே சுகமாகு
மமலனே யருமை மதவே
எனுதினமு மனதினினே தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 49

## மூழுக்குநாள்.

வருமாதி வாரந் தலைக்கெண்ணெ யாகாது
வடிவமிகு மழுகுபோகும்
வளர்திங்க ளுக்கதிக பொருள்சேரு மங்கள
வாரந் தனக் கிடர்வரும்
திருமேவு புதனுக்கு மிகுபுத்தி வந்திடுஞ்
செம்பொனுக் குயரறிவு போக்
தேடிய பொருட்சேத மாம்வெள்ளி சனிபெண்
செல்வமுண் டாயு ளுண்டாம் [ணெய்
பரிகார மூனதாதி வாரந் தனக்கலரி
பௌமனுக் கானசெழுமண்
பச்சறுகு பொன்னவற் காமெருத் துளொளிப்
பார்க்கவற் காகு மெனவே
அரிதா வரிக்நபே ரெண்ணெய்சேர்த் தேமுழுக்
காடுவா ரருமை மதவே
எனுதினமு மனதினினே தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 50

## மருத்துவன்.

நாதுப் பரீகைஷவரு காலதேசத்தொடு
சரீரலட்சண மறிந்து

தன்வந்த்ரி கும்பமுனி தேரர்கொங்கணர்சித்தர்
தமதுவா கட மறிந்து
பேதப் பெருங்குளிகை சுத்திவகை மாத்திரைப்
பிரயோக மோடுபஸ்பம்
பிழையாது மண்டூர செந்தூர லட்சணம்
பேர்பெறுங் குண வாகடம்
சோதித்து மூலிகா விதங்கண் டுங்கண்டு
தூயதை லம் லேகியஞ்
சொல்பக்கு வங்கண்டு வருரோக நிண்ணயந்
தோற்றியே யமிர்த கரமாய்
ஆதிப் பெருங்கேள்வி யுடையவனு யுயர்வேத
னுகுமெம தருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீசுர தேவனே. 51

## உண்மையுணர்குறி.

சோதிடம் பொய்யாது மெய்யென்ப தற்கினிய
சூழ்கிரக ணஞ் சாட்சியாஞ்
சொற்பெரிய வாடகம் நிஜமென்கை பேதி
தூயமாத் திரைசாட்சி யாம்
ஆதியிற் செய்ததவ முண்டில்லை யென்பதற்
காளடிமையே சாட்சியாம்
மரிதேவ தேவனென் பதையறிய முதநூ
லரிச்சுவடியே சாட்சியாம்
நாதனே மாதேவ னென்பதற் கோருத்ர
நமகசம கஞ்சாட்சி யாம்
நாயேனை ரட்சிப்ப தன்பார மரியபன்
னுளுமர்ச் சனைசெப் சரணத்
காதிநா யகமிக்க வேதநா யகனுன
வண்ணலே யருமை மதவே

ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 52

## பிறவிக்குணமாருமை.

கலங்காத சித்தமுஞ் செல்வமுஞ் ஞானமுங்
கல்வியுங் கருணை விளைவுங்
கருதரிய வடிவமும் போகமுந் தியாகமுங்
கனரூப முளமங்கையும்
அலங்காத வீரமும் பொறுமையுந் தந்திரமு
மாண்மையு மமுத மொழியு
மானவிச் செயலெலாஞ் சனனவாசனையினு
லாகிவரு மன்றி யிலமேல்
நலஞ்சேரு மொருவரைப் பார்த்ததுபெறக்கருதி
னண்ணுமோ ரஸ்தாளி தன்
னற்சுவை தனக்குவர வேம்புதவ மேநெடிது
நாள்செயினும் வாராது காண்
அலங்கார மாகமலர் கொன்றைமா லிகைசூடு
மண்ணலே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 53

## ஊழ்வலி.

கடலளவு ரைத்திடுவ ரரிபிரம ருருவமுங்
காணும்படிக் குரை செய்வார்
காசினியி னளவுபிர வாணமது சொல்லுவார்
காயத்தி னிலைமை யறிவார்
விடலரிய சீவநிலை காட்டுவார் மூச்சையும்
விடாமற் றடுத் தடுக்கி
மேன்மேலும் யோகசா தனைவிளைப் பாரெட்டி
விண்மீதி னுந்தாவு வார்
தொடலரிய பிரமநிலை காட்டுவா ரெண்வகைத்
தொகையான சித்தி யறிவார்

சூழ்வினைவரும்பொழுது சிக்கியுழல்வாரது
 துடைக்கவொரு நான்மு கற்கும்
அடைவல வெனத்தெரிந் தளவில்பரநூல்சொல்லு
 மண்ணலே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
 ரறப்பளீசுரதேவனே. 54

## ஒப்புயர் வில்லாமை.

வேதியர்க் கதிகமாஞ் சாதியுங் கனகமக
 மேருவுக் கதிக மலையும்
வெண்டிரை கொழித்துவரு கங்கா நதிக்கதிக
 மேதினியி லோடு நதியும்
சோதிதரு மாதவர்க் கதிகமாங் காந்தியுஞ்
 சூழ்கனற் கதிக சுசியுந்
தாயதாய் தந்தைக்கு மேலான தெய்வமுஞ்
 சுருதிக் குயர்ந்த கலையும்
ஆதிவட மொழிதனக் கதிகமா மொழியுமக
 ரன்னதா னந்த னிலுமோ
ரதிகதா னமுமில்லை யென்றுபல நூலெலா
 மாராய்ந்த பேருரை செய்வார்
ஆதவன் பிரமன்விண் ணவர்முனிவர் பரவவரு
 மண்ணலே யருமைமதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
 ரறப்பளீ சுரதேவனே. 55

## வீண்செயல்.

வேட்டகஞ் சேர்வோரும் வீணரே வீணுரை
 விரும்புவோ ரவரின் வீணர்
விருந்து கண்டில்லா டனக்கஞ்சி யோடிமறை
 விரகிலோ ரவரின் வீணர்

நாட்டந்தருங்கல்வி யில்லோரும் வீணரே
நாடியவர் மேற்கவி சொல்வார்
நாவிலந் தனில்வீண ரவரினும் வீணரே
நரரைச் சுவக்கு மெளியோர்
தேட்டறிவி லாதபெரு வீணரே யவரினுஞ்
சேரொரு வரத்து மின்றிச்
செலவுசெய் வோரதிக வீணராம் வீணனாய்த்
திரியுமெளி யேனை யாட்கொண்
டாட்டஞ் செயும்பதாம்புய முடியின்மேல்வைத்த
வமலனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவ னே. 56

## உதவியின்றிக் கெடுவன.

மூப்பொருவ ரில்லாத குமரிகுடி வாழ்க்கையும்
மூதானிலாத நகரும்
மொழியும்வெகு நாயகஞ்சேரிடமும் வருமெது
மோனையில் லாத கவியுங் [கை
காப்பமைவி லாததோர் நந்தவனமும் நல்ல
கரையிலா நிறை யேரியுங்
கசடறக் கற்காத வித்தையு முபதேச
காரண னிலாத தெளிவுங்
கோப்புள வினோதமுடை யோரகுரு புகழாத
கோதையர்செய் கூத்தாட்டமுங்
குளிர்புன னிறைந்துவரு மற்றோர் மதினின்று
கோடுயர்ந் தோங்கு தருவும்
[ ஆப்பதில் லாததே ரிவையெலா மொகுறன்
மையனே யருமைமதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 57

## இவையே போதுமெனல்,

பொய்யாத வாய்மையுஞ் சீலமுஞ் சார்ந்துளோர்
பூவளஞ் செய்யவேண்டுமோ
பொல்லாதகொலைகளவி லாதநன்னெறியுளோர்
புகழறஞ் செய்யவேண்டுமோ
நையாத காமத்தை லோபத்தை விட்டபேர்
நல்லறஞ் செய்யவேண்டுமோ
நன்மனே சுத்தியுண் டானபேர் மேனுமொரு
நதிபடிந் திடவேண்டுமோ
மெய்யாநி னடியரைப் பரவுலோ ருன்பதம்
விரும்பிவழி படவேண்டுமோ
வேதியர்தமைப்பூசை பண்ணுவோர்வானவரை
வேண்டியர்ச் சனை செய்வரோ
ஐயாறு டன்மகலே சோணசை லந்தில்லை
யதிபனே யருமை மதவே
ளனுதினமு மனதினினே தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவ னே. 58

## அரியராவோர்.

பதின்மரிலொருத்தர்சபை மெச்சிடப்பேசுவோர்
பாடுவோர் நூற்றி லொருவர்
பார்மீதி லாயிரத் தொருவர்விதி தப்பாது
பாடிப்ர சங்க மிடுவோர்
இதனருமை யறிகுவோர் பதினாயிரத்தொருவ
ரிதையறிந் திதய மகிழ்வா
ரீகின்ற பேர்புவியி லேயருமை யாகவே
யிலட்சத்தி லேயொருவ ராம்
துதிபெருக வருமூன்று காலமு மறிந்தமெய்த்
தூயர்கோ டியி லொருவராந்
தொல்லுலகு புகழ்காசி யேகாம் பரங்கைலை
சூழுமவி னாசி பேரூர்

அதிகமுள வெண்காடு செங்காடு காளத்தி
யத்தனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 59

## கற்புமேம்பாடு,

தன்கணவ னுருவமாய்த் தற்புணர வந்தோன்
றனக்கிணங் காத நிறையா
டழற்கதி ரெழாமலும் பொழுதுவிடி யாமலுஞ்
சாபங் கொடுத்த செயலாள்
மன்னிவள ரழன்மூழ்கி யுலகறிய வேதனது
மகிழ்நனைச் சேர்ந்து பரிவாள்
மைந்தனைச் சுடவந்த விறைவன் றடிந்தவடி
வாண்மாலை யான கனிவாள்
நன்னதி படிந்திடுவ தென்னவா ரழன்மூழ்கி
நாயகனை மேவு தயவா
ளனிலம் புகழ்சாலி பேர்பெறு நளாயினி
நளினமலர் மேல்வை தேகி
அன்னமென வருசந்த்ர மதிதுரோ பதியென்ப
ராதியே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 60

## கோடியுடுக்குநாள்,

கறைபடா தொளிசேரு மாதிவா ரந்தனிற்
கட்டலாம் புதிய சீலை
கலைமதிக் காகாது பலகாலு மழையினிற்
கடிதுநனை வுற் றெறிதரும்
குறைபடா திடர்வரும் வீரியம் போமரிய
குருதிவா ரந்த னக்குக்
கொஞ்சநா ளிற்கிழியும் வெற்றிபோம்பந்தியிற்
குருவார வதிலணிந் தால்

மறைபடா தழகுண்டு மேன்மேலு நல்லாடை
வருமினிய சுக்கி ரற்கோ
வாழ்வுண்டு திருவுண்டு பொல்லாத சனியற்கு
வாழ்வுபோ மரண முண்டாம்
அறைகின்ற வேதாக மத்தின்வடி வாய்விளங்
கமலனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீசுர தேவனே. 61

## சகுணம்.

சொல்லரிய கருடன்வா னரமரவ மூஞ்சூறு
சூகரங் கீரி கலைமான்
றுய்யபா ரத்வாச மட்டையெலி புன்கூகை
சொற்பெருக மருவு மாந்தை
வெல்லரிய கரடிகாட் டான்பூனை புலிமேல்
விளங்குமிரு நாவு டும்பு
மிகவுரைசெ யிவையெலாம் வலமிருந்திடமாகில்
வெற்றியுண் டதிக நலமாம்
ஒல்லையினி வழிப்பயண மாருமவர் தலைதாக்க
வொருதுடை யிருத்தல் பற்ற
லொருதும்மலானையிடலிருமல்போகேலென்ன
வுபசுருதி சொல்லிவை யெலாம்
அல்லறரு நல்லவல வென்பாமுதி யோர்பரவு
மமலனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 62

## இதுவுமது.

நரிமயில் பசுங்கிள்ளை கோழிகொக் கொடுகொக்கை
நாவிசிச் சிலியோந்தி தான்
நரையான்கடுத்தவாய்ச்செப்போத்துடன்மேதி
நாடரிய சுரபி மறையோர்

வரியுழுவை முயலிவை யனைத்தும்பல மாயிடின்
வழிப்பயண மாகை நன்றே
மற்றுமிவை யன்றியே குதிரையனு மானித்தல்
வாய்ச்சொல்வா வாவென் றிடல்
தருவளை தொனித்திடுதல் கொம்புகிடு முடிமுரசு
தப்பட்டை யொலிவல் வேட்டுத்
தனிமணி முழக்கெழுத லிவையெலா முர்வழி
தனக்கேக ர்ன்மை யென்பார்
அருணகிரி ஞேதயத் தருணபா னுவையனைய
வண்ணலே யருமை மதவே
எனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 63

இதுவுமது.

தலைவிரித் தெதிர்வருத லொற்றைப் பிராமணன்
றவசிகன் ஞசி தட்டான்
றனமிலா வெறுமார்பி மூக்கறைபுல் விறகுதலை
தட்டைமுடி மொட்டைத் தலை
கலன்கழி மடந்தையர் குசக்கலஞ் செக்கான்
கதித்ததில் தைல மிவைகள்
காணவெதிர்வரவொணு நீர்க்குடபெருக்கூடை
கனிபுலா லுபய மறையோர்
நலமிகு கமங்கலை ஷிழங்குரூ தகமங்கை
நாளும்வண் ணனழுக் கும்
நசைபெருகு பாற்கலச மணிவளையன்மலரிவை
ஞடியெதிர் வர நன்மையாம்
அலைகொண்ட கங்கைபுனை வேணியாய்ப்பரசணியு
மண்ணலே யருமை மதவே
எனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே 64

## உணவில் விலக்கு,

கைவிலக் குக்கொலும் பாலசப் பால்வருவ
காராக் கறந்த வெண்பால்
காளான் முருங்கைகறை கொம்மடி பழஞ்சோ
காந்திக் கரிந்தசோறு
செவ்வையில் சிறுகீரை பீர்க்கத்தி வெள்ளுப்பு
தென்னைவெல் லமலா வகஞ் *
கீரிலா வெள்ளுள்ளி யீருள்ளி யிங்கு 0 வொடு
சிறப்பில்வெண் கத்தரிக்காய்
எவ்வமில் சிவன்கோயி னிர்மாலி யங்ரெண
மிவகுசுட ரில்லாத ரு
ணிவையெலாஞ் சீலமுடை யோர்களுக் காகா
வெனப்பழைய நூலுரை செயும்
ஐவகைப்புலன்வென் றமுனிவர்விண்ணவர்போற்று
மமலனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீசுரதேவனே. 65

## றற்பொருளிற் குற்றம்.

பேரான கங்கா நதிக்குமதன் மேல்வரும்
பேனமே ● தோஷ மாகும்
பெருகிவளர் வெண்மதிக் குள்ளுட் கலங்கமே
பெரிதான தோஷ மாகும்
சீராந் தபோதனர்க் கொருவர்மேல் வருகின்ற
சிற்றமே தோஷ மாகும்
தீதின்முடி மன்னவர் விசாரித் திடாதொன்று
செய்தவர் மேற்றோஷமாம்
தாராள மாய்மிகத் தந்துளோர் தாராமை
தானிரப் போர் தோஷமாஞ்
சாரமுள நற்கருப் பஞ்சாறு கைப்பதவர்
தாலஞ் ] சேய் தோஷமாகும்

---

* மலாவகம்-பிண்ணக்கு. 0 இங்கு-பெருங்கா யம். ● பேனம்-நுரை. ] தாலம்-நா.

ஆராயுமொருநாள் மறைக்குமெட் டாதொளிரு
மண்ணலே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 66

## மணஞ்செய்வதற்குமாதம்.

சித்திரைத் திங்களினின் மனைகோல மனைபுகச்
செல்வமுண் டதினு நலமே
சேரும்வை காசிக்கு மேனு ளரன்புரந்
தீயிட்ட தானி யாகா
வெற்றிசொ ளிராகவன் றேவிசிறை சேர்கடகம்
வீறல்ல வாவணி சுகம்
மேலிடுங் கன்னுயிர ணியன்மாண்ட தாகாது
மேன்மையுண் டைப் பசிக்கே
உத்தமங் கார்த்திகைக் காகாது மார்கழியி
லோங்குபா ரதம் வந்தநா
ளுயக்வுண்டு மகரத்தின் வாசிமா தத்தில்விட
மும்பர்கோ னுண்ட தாகா
தத்தநீ மாரனை யெரித்தபங் குனிதானு
மாகுமோ வருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 67

## விருந்துவாரம்.

செங்கதிர் குறவுபோம் பகைவரும் விருந்தொருவ
செய்யொணு துண்ணுறுது
திங்களுக் குறவுண்டு நன்மையாம் பகைவருஞ்
செவ்வாய் விருந் தருந்தார்
பொங்குபுத னன்மையுண் டுறவாம் விருந்துணப்
பொன்னவற் கதிக பகையாம்
புகாவற் காகிலோ கெடுநாள் விரோதமாய்ப்
போனவுறவுந்திரும்பும்

மங்ருநிகர் சனிவார நல்லதாமி தனினு,
மனமொத் திருந்த விடமே
வாலாய மாய்ப்போய் விருந்துண விருந்துதவ
வாய்ந்தநா ளென் றறியலாம்
அங்கையில் விளங்கிவளர் துங்கமழு வாளனே
யண்ணமே யருமை மதயிவ
ளனுதினமு மனதினினே தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 68

## பூப்புவாரம்.

அருக்கனுக் கதிரோகி யாவணற் சோமனுக்
கானகற் புடைய ளாவா
ளங்கார கற்குவெகு துக்கியா வாள்புந்தி
யளவில்லைக் குழவி பெருவாள்
திருத்தகு வியாழத்தின் மிக்கசம் பத்திளெடு
சிறுவரைப் பெற்றெடுப் பாள்
சீருடைய பார்க்கவற் கதிபோக வதியுமங்
திருவுமுண் டாயி ருப்பாள்
கருத்தழிந் தெறில்குன்றி வருமை கொண்டலைகு
காரிவா ரத்தி லாகில் [வால்
களபமுள மடமாதர் புட்பவதி யாம்வார
காலபல னென்றுரை செய்வார்
அருத்தியுடனெளியேனையாட்கொண்டசோதியே
யண்ணலே யருமை மதவே
ளனுதினமு மனதினினே தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 69

## பூப்பிலக்கினம்.

வருமைதப் பாதுவரு மேடத்தி லிடபத்தின்
மாறாத விபசாரி யாம்
வாழ்வுண்டு போகமுண் டாகுமிது னங்கடகம்
வசிதினிற் பிறரை யணைவாள்

சிறுவைசெப்பு மிடிசேர்வன் மிருகேந்திரற் கெனிற்
சீர்பெறுவள் கன்னி யென்னில்
செட்டுடைய டுலையெனிற் பிணியான்மெலிந்திடு
டேழினுக் குத் தனுவெனில்
நெறிசிதைவள் பூருவத் தமரநெறி யுடையளா
நீண்மகர மான மில்லா
நிறைபோக வதிகும்ப மெனின்மீன மென்னி
னெடியபே ரறி வுடையளாம்
அறிவாளர் மடமாதர் தமைப்பிறி யிராசிபல
வதுவென்ப ரருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 70

## தீவுங் கடலும்.

பாவலந் தீவினைச் சூழ்தருங் கடலளவு
லட்சம்யோ சனையி தனையே
நாடொறுஞ் சூழ்வதில் வந்தீ வதைச்சூழ்தன்
னற்கழைச் சாற்றின் கடல்
மேவுமிது சூழ்வது குசத்தீ வதைச்சூழ்தன்
மிகுமதுக் கடல் தனையே
விழைவொடுஞ் சூழ்தல்கிர வுஞ்சதீவம்மிதனின்
மேற்சூழ்த னெய்க் கடலாம்
பூவிலிது சூழ்தல்சா கத்தீவ மீங்கிதைப்
போர்ப்பது திருப்பாற் கடல்
போதாவது சூழ்தல்சான் மலிதீவ மாந்தயிர்ப்
புணரியப் பாலு மப்பால்
ஆவலுறு புட்கரத் தீவா மிதைச்சூழ்வ
தரும்புனற் றருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீசுரதேவனே. 71

## மேலானபொருள்.

சுழிசுத்த மாயிருக் ததிலும் படைக்காண
துரகமோர் மாணிக்க மாஞ்
சூழ்புவிக் கரசனு யதிலே விவேகமுள்
துரையுமோர் மாணிக்க மாம்
பழுதற்ற வதிரூப வதியுமாம் கற்புடைய
பாவையோர் மாணிக்க மாம்
பலகலைகள் கற்றிறறி யடக்கமுள பாவலன்
பார்க்கிலோர் மாணிக்க மாம்
ஒழிவற்ற செல்வனு யதிலே யாகியா
முசிதனோர் மாணிக்கமா
முத்தம குலதுதித் ததிலுமோ மெய்ஞ்ஞான
முடையனோர் மாணிக்கமாம்
அழிவற்ற வேதாக மத்தின்படி வாய்விளங்
கமலனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 72

## உண்டியிலையும் முறையும்.

வாழையிலை புன்னைபுர சுடனற் குருக்கத்தி
மாப்பிலாத் தெங்குபன்னீர்
மாசிலமு தண்ணலா முண்ணுத வேவரசு
வசனஞ் செழும் பிரட்லம்
தாழையிலை பத்தியா லேரண்ட பத்திரஞ்
சததேவ மூண முருக்குச்
சாருமிவை யன்றிவெண் பாலெருக் கிச்சிலிலை
தனினுமுண் டிடவொணு தால்
தாழ்விலாச் சிற்றுண்டி ரேடிக் கடிமருகல்
சாதங்கள் பல வருந்தல்
சற்றுண்டன்மெத்தவு ணித்தனையு மெய்ப்பிணி
தனக்கிட மெனப் பருகியார்

ஆழிபுடை சூழுலகில் வேளாளர் குலதிலக
ளுகுயெம 'தருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீசுர தேவனே. 73

## கவிஞர் வருமை.

எழுதப் படிக்கவகை தெரியாத மூடனை
விணையிலாச் சேடனென்று
மீவதில் லாதகன லோபியைச் சபையதனி
லிணையிலாக் கர்ண னென்று
அழகற்ற வெகுகோர ரூபத்தை யுடையோனை
யதிவடிவ மார னென்று
மாயுத மெடுக்கவுந் தெரியாத பேடிதனை
பாண்மைமிகு விஜய னென்று
முழுவதும் பொய்சொல்லி யலைகின்ற வஞ்சகனை
மொழியரிச் சந்த்ர னென்றும்
மூதுலகி லில்வண்ணஞ் சொல்லியே கவிராஜர்
முறையின்றி யேற்பதென்னே
அழலென வுதித்துவரு விடமுண்ட கண்டனே
யமலனே யருமை மதவேள்
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 74

## கவிஞன்,

தென்னமிர்த தாரையென மதுரங் கதித்தபைந்
தேன்மடை திறந்த தெனவே
செப்புமுத்தமிழினொடு நாற்கவிதை நாற்பொரு
டெரிந்துரைசெய் திறமையுடனே
விள்ளரிய காவியத் திட்பொரு ளலங்காரம்
விரியிலக் கண விகற்பம்
வேறுமுள தொன்னூல் வழக்குமுல கத்தியல்பு
மிக்கப்ர பந்தவண்மை

உள்ளமெல் லாமறிந் தலையடங் குங்கடலை
யொத்ததிக சபை கண்டபோ
தோங்கலை யொலிக்கின்ற கடல்போற் ப்ரசங்க
முரைப்பவன் கவிமு ளுகும்
அள்ளிவிட முண்டகனி வாயனே நேயனே
யமலனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 75

## நற்சார்பு.

நாணரிய பெரியோர்க டெரிசனம் லபிப்பதே
கண்ணிணைகள் செய் புண்ணியங்
கருணையா யவர்பொன்மொழி கேட்டிட லபிப்
காதுசெய் திடு புண்ணியம் [பதிரு
பேணியவர் புகழையே துதிசெய்ய லபித்திடுதல்
பேசில்வாய் செய் புண்ணியம்
பிழையாம லவர்தமைத் தொழிதிட லபிப்பது
பெரியதுசெய் திடு புண்ணியம்
வீணெறிசெ லாமலவர் பணிவிடை லபிப்பதுதன்
மேனிமெய்திடு புண்ணியம்
விழைவொடவர் சொற்படி நடந்திடலபிப்பதே
மிக்கபூருவ புண்ணியம்
ஆணவ மெனுங்களை களைந்தறி வினைதந்த
வண்ணலே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 76

## பிறந்தநாளோடுவருகிற வாரபலம்,

சென்ம நக்ஷத்திரத் தாதிவா ரம்வரிற்
றீரா தலைச்ச லுண்டாந்
திங்களுக் காகில்வெகு சுகபோச னத்தினொடு
திருமாதி னருளு முண்டாம்

வன்மைதரு மங்கார வாரம்வந் தாற்சிறிதும்
வாராது சுகமதென்பார்
மாசிப்பல கலைபயில்வர் மேன்மையாம்புந்தியெ
வாரத் துடன் கூடினல் [னும்
நன்மைதரு குருவாக மதுசேர்ந்து வரிலாடை
நன்மையுட னேவந்திடும்
நாரியருப்பன்போக மிகவுமுண்டொருவெள்ளி
நல்லவா ரத்தில் வந்தால்
அன்மருவு பீடையுண் டாமென்பர் சநியனுக்
கமலனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீசுர தேவனே. 77

## இதனையுடையவர்க் கிதுவில்லையெனல்,

பொன்னசை யுள்ளவர்க் குறவேது குருவேது
பொங்குபசி யுள்ள பேர்க்குப்
போதவே சுசியேது ருசியேது மயல்கொண்டு
போதுமாதர் விழி வலையிலே
எந்நாளு மலைபவர்க் கச்சமொடு வெட்கமே
தென்றென்று மறுகல்விமே
லிச்சையுள பேர்க்கதிக சுகமேது துயிலேது
வெளிதா யிருந்து கொண்டே
பன்னாளு மலைபவர்க் கிறமேது புகழேது
பாரிலொரு வர்க் கதிகமே
பண்ணியிடு மூடருக் கறமேது மறமலாற்
பகர்கிரைய வொன்றுள்து காண்
அன்னண * வருகரி யுருத்தணியு மெய்யனே
யமலனே யருமைமதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 78

* அல்-நாண.

## மழைநாட்குறிப்பு.

சித்திரைத் திங்கள்பதின் மூன்றுக்கு மேனல்ல
சீரான பரணி மழையுந்
தீதில்வை காசியிற் பூரணை கழித்தபின்
நேருநா லாநாளி னில்
ஒத்துவரு மழைமவ் வானியிற் றேய்பிறையி
லோங்குமே காதசி யினி
லொளிர்பரிதிவீழ்பொழுதின்மந்தாரமும்மறை
முண்டா யிருந் தாடியில்
பத்தியரு தேதியைந் தினிலாதி வாரமும்
பகருமா வணிமூல நாள்
பரிதியு மறைந்திடக் கனமழை பொழிந்திடப்
பாரில்வெகு விளைவு முண்டாம்
அத்தனே பைங்குவளை மாலையணி மார்பனு
மண்ணலெம தருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 79

## இருந்துமுதவாமை.

சமயத்தி லுதவாத நிதியமேன் மிக்கதுயர்
சார்பொழுதி லாத கிளையேன்
சபைமுகத் துதவாத கல்வியே னெதிரிலரு
சமையத்தி லாத படையேன்
விமலனுக் குதவாத பூசையே னுளுமிருள்
வேளைக்கி லாத சுடரேன்
வெம்பசிக் குதவாத வன்னமே னீடுகுளிர்
வேளைக்கி லாத கலையேன்
தமதுதளர் வேளைக்கி லாதவோர் மனைவியேன்
சரசத்தி லாத நகையேன்
சாமரண காலத்தி லுதவாத புதல்வனேன்
றரணிமீ தென்பர் கண்டாய்

அமரர்க்கு முனிவர்க்கு மொருவர்க்கு மெட்டாத
வாதியே யருமை மதவே
ளனுதினமு மனதினினைந் தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே 80

## மறையோர் சிறப்பு.

ஓராறு தொழிலையுங் கைவிடார் சௌசவிதி
யொன்றுதப் பாது புரிவா
ருதயாதி யிற்சென்று நீர்படிகு வார்கால
மொருமூன்றி னுக்கு மறவா
தாராய்ந்து காயத்ரி யதுசெபிப் பார்நாளு
மதிபூசைகள் பண்ணுவார்
யாகாதி கருமங்கள் மந்த்ரகிரி யாலோப
மின்றியே செய்து வருவார்
பேராசை கொண்டார் வைதிகநன் மார்க்கமே
பிழையா திருக்கு மறையோர்
பெய்யெனப்பெய்யுமுகிலவர்மகிமையெவர்களு
பேசுதற் கரிதரிது காண்
ஆரார் நெடுஞ்சடில வமலனே யெனையாளு
மண்ணலே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 81

## அரசர் சிறப்பு.

மநுநீதி முறைமையும் பாரார்சர் கொண்டாட
வருமதிக ரண வீரமும்
வால்விஜய மொடுசரச சாதனவி சேஷமும்
வாசிமத கரி யேற்றமும்
கனமா மிமைச்சரும் பலமான துர்க்கமுங் *
கைகண்ட போர்ப் படைஞருங்
கஜரத பதாதியுந் துரகப்பர வாகமுங்
காலதே சங்க ளவையும்

* துர்க்கம்-கோட்டை

இனிதாயறிந்தஸ்தா னுபதிகளொடுசமர்க்
கிளையாத களகர்த்தரு
மென்றும்வற் ருததன தானியி சமுத்திரமு
மேற்றமுள குடிவர்க்கமும்
அனேவோரு மெச்சவிங் கிவையெலா முடையபே
ரரசரா மருமைமதவே
ளனுதினமு மனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீ சுரதேவ னே. 82

## வைசியர் சிறப்பு.

நீள்கடல் கடந்திடுவர் மலையாளமும்போவார்
நெடிது தூரந் திரிந்து
நினைவுதடு மாறார்கள் சலியார்கள் பொருடேடி
நீனிலத் தரசு புரியும்
வாளுழவ ரைத்தமது கைவசஞ் செய்வர்கள்
வருமிடம் வராதவிடமும்
மனதையு மறிந்துதவி யொன்றுனூ ருயிட
வளர்ப்பர்வரு துலை துலைக்கும்
ஆள்விடுவா வலிகுறை வதுவிசா ரித்திடுவ
ரளவில்பற் பலசரக்கு
மவைவுறக் கொள்வர்விற் பார்கணக்கதிலணுவு
மறைவிடார் செலவு வரிலோ
ஆளியோத் தேமலையி னளவுங்கொடுத்திடுவ
ரருள்வசிய ரருமைமதவே
ளனுதினமு மனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 83

## வேளாளர் சிறப்பு.

சகனுதி கருமமுந் தப்பாமல் வேதியா
ரிபற்றிநல் லோர் பெறுவதும்
இராச்யபாரஞ்செய்து முதிமன்னர்வெற்றிகொ
டென்றுநல்லோர் பெறுவதும்

வசனாதி தப்பாது தனதானி யந்தேடி
வசியர்நல் லோர்பெறுவதும்
மற்றுமுள பேரெலா மிடியென் றிடாததிக
வளமைபெற் றோர்பெறுவதும்
திசைதோறு முள்ளபல தேவாலயம் பூசை
செய்யநல் லோர்பெறுவ துஞ்
சீர்கொண்ட பைங்குவளை மாலைபுனைவேளாளர்
செய்யுமே ழிப்பெருமை காண்
அசையாது வெள்ளிமலை தனின்மேவி வாழ்கின்ற
வண்ணலே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீசுர தேவனே. 84

## தானாதிபதி மந்திரி சேனாதிபதிகளினியல்பு

தன்னரசர் வலுமையும் பாராச ரெண்ணமுஞ்
சாலமேல் வரு கருமமுந்
தானறிந் ததிபுத்தி யுத்தியுண் டாயினேன்
றானாதி பதியாகு வான்
மன்னவர் மனத்தையுங் காலதே சத்தையும்
வாழ்குடி படைத் திறமையும்
மந்திரா லோசனையு மெல்லா மறிந்தவன்
வளமான மதி மந்திரி
துன்னியப டைக்குணங் கரிபரி பரீக்ஷையே
சூழ்பகைவர் புரி சூழ்ச்சியுந்
தோலாத வெற்றியுந் திடமான சித்தியுள
சூரனே சேனாதி பன்
அன்னையிலு நல்லமலை மங்கைபங் காளனே
யனகனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 85

## இராயசர் கருணிகர் சிறப்பு.

வருமோலை யுத்தரத் தெருதிவரு பொருளினால்
வரவடுப் போன் மனதையும்

மருவிவரு கருகமும் தேசகா லத்தையும்
வருகர தலாம வகமாம்
விரையர ரறிந்தரசரெண்ணிலெனவிணையள
விடவெருத வாரிக்கவும் [யின்
வெற்றிகொண்டேபெரியபுத்திமடையோன்புவி
மேன்மைரா யசகார ரும்
கருவா யறிந்துதொகை யீராறு நொடியினிற்
கடிதேற்றி டக்குறைக் கக்
கடுகையொரு மலையாக்க மலையையொரு கடுகு
காட்டுவோன் கரு நீகனும் [மாக்
அருவாகி யுருவாகி யொளியாகி வெளியாகு
மண்ணமலே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 86

## கோபத்தின் கொடுமை.

கோபமே பாவங்க ளுக்கெலாந் தாய்தந்தை
கோபமே குடி கெடுக்கும்
கோபமே யொன்றையுங் கூடிவர வொட்டாது
கோபமே துயர் கொடுக்கும்
கோபமே பொல்லாது கோபமே சீர்கேடு
கோபமே வுற வறுக்கும்
கோபமே பழிசெயுங் கோபமே பகையாளி
கோபமே கருணை போக்கும்
கோபமே யீனமாங் கோபமே யெவரையுங்
கூடாம லொருவ னுக்கும்
கோபமே மறலிமுன் கொண்டுபோய்த் தீநரக
கக்குழியி னிற்றள்ளு மால்
ஆபத்தெலாந் தவிர்த் தென்னையாட்கொண்டருளு
மண்ணமலே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீசுர தேவனே. 87

## பல்துறை.

தான்புரிதவத்தையுங் கொடையையும் புகழுவோ
 தங்களுக் கவை தழைவுறு
 சற்றுமறி வில்லாம லந்தணரை நிந்தனைசெய்
 தயவிலோ ராயுன் பெருகார்
மேன்படு நறுங்கலவை மாலைதயிர் பால்புலால்
 வீடுநற் செந்நெ லிவைகள்
 வேறொருவர் தந்திடினு மதுமொழி யறிந்தபே
 விலைகொடுத் தேகொள்ளுவார்
தேன்கனி கிழங்குவிற் கிலையிவை யனைத்தையுந்
 தீண்டரிய நீச ரெனினுஞ்
 சீர்பெற வளிப்பரே லிகழாது கைக்கொள்வர்
 சீலமுடையோ ரென்பரால்
ஆனகொடி யுயர்த்தவுமை நேசனே யீசனே
 யண்ணலே யருமை மதவே
 ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
 ரறப்பளீ சுரதேவனே. 88

## தத்துவத் திரவியம்.

பூதமோ ரைந்துடன் புலனைந்து ஞானம்
 பொருதுமிந் திரிய மைந்து
 பொருவில்கன்மேந்திரியமைந்துமனமாதியாம்
 புகலரிய கரண நான்கே
ஒதினே ரிதையாத்ம தத்துவ மெனச்சொல்வ
 ருயர்கால நியதி கலையோ
 யோங்கிவருவித்தைரா கம்புருடன்மாயையென்
 றுரைசெய்யு மோர் ரேழுமே
தீதில்வித் யாதத்வ மென்றிவ ரிவையெலாற்
 றிகழ்சுத்த வித்தை யீசன்
 சீர்கொள்சர தாக்கியஞ் சக்கசிவ மைந்துமே
 சிவதத்வ மென் றறைகுவார்
ஆதிவடவிழலிற் சனகாதி யாக்கருள்செ
 யண்ணலே யருமை மதவே

ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 89

## மன்மதபாணமும் அவற்றின் குணமும்.

வனசஞ் செழுஞ்சூத முடனசோ கந்தளவ
மலர்நீல மிசை யைந்துமே
மாரவேள் கணைகளா மிவைசெயுங் குணமுளரி
மனதிலா சையை யெழுப்பும்
வினவிலொண் சூதமலர்மெய்ப்பசலையுண்டாக்கு
மிகவசோ கந்துயர் செயும்
வீழ்த்திடுங் குளிர்முல்லை நீலமுயிர் போக்கிவிடு
மேவுமிசை செயு மவத்தை
நினைவிலது வேநோக்கம் வேறொன்றி லாசையற
நெட்டுயிர்ப் பொடுபி தற்ற
னெஞ்சந்திடுக்கிடுதலனம்வெறுத்திடல்தாய்ச்ச
னேர்தன்மௌ னம்புரிகுதல்
அனையவுயி ருண்டில்லை யென்னவீ ரைந்துமா
மத்தனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 90

## மன்மதனுபகரணங்கள்.

வெஞ்சிலை செழுங்கழைவி னரிகரு வண்டின
மேய்விடுங் கணைக ளலராம்
வீசிடுந் தென்றறேர் பைங்கிள்ளை யேபரிகள்
வேழங் கெடாத விருளாம்
வஞ்சியர் பெருஞ்சேனை கைதையுடை வாணெடிய
வண்மைபெறு கடன் முரசமாம்
மகரம் பதாகைவரு கோகிளங் காகளம்
மனதை பெரும் போர்க்களம்
சஞ்சரிகை யிசைபாடல் குமுதநே யன்கவிகை
சாரிரதியே மனைவி யாங்

தருகண்மட மாதரிள முலைமருட மாமல்கு
    றவளு திருக்கு மிடமாம்
அஞ்சுகணைமாரவேட் கென்பரெளி யோர்க்கெலா
    மமுதமே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
    ரறப்பளீ சுரதேவனே. 91

## பகைகொளத் தகாதவர்.

மன்னவர மைச்சர்துர்ச் சளர்கோளர் தூதரொடு
    மாறாத மர்மமுடையோர்
வலுவர்கரு ணீகர்மிகு பாகமூசெய் தன்னமிடு
    மடையர்மந் திர வாதியர்
சொன்னமுடையோபுலைய ருபதேசமதுசெய்வோ
    சூழ்வயித் தியர் கவிதைகள்
சொற்றிடும் புலவரிவர் பதினைந்து பேரொடுச்
    சொற்பனந் தனி லாகிலும்
நன்னெறி யறிந்தபேர் பகைசெய் திடார்களிந்
    நாவிலத் தென்பர் கண்டாய்
நாரியோர் பாகனே வேதாக மம்பரவு
    நண்பனே யன்பர் நிதியே
இன்னமூர் பிரவனும் கண்ணனுங் காணாத
    வண்ணலே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
    ரறப்பளீ சுரதேவனே. 70

## இதாகிதஞ்செய்து பயன் கொள்வன.

சுவைசோ கருப்பைவென் பாலைப் பருத்தியைச்
    சொல்லுநன் னெல்லை யெள்ளைத்
தூயதெங் கின்கனியை யெண்ணாத துட்டரைத்
    தொண்டரைத் தொழு தொழும்பை
நவைதீரு மாறுகண் டித்தே பயன்கொள்வர்
    நற்றமிழ்க் கவி வாணரை
நலமிக்க செழுமலரை யோவிய மெனத்தக்க
    நயமுள்ள நாரியர் தமைப்

மிதி னுபகார நெஞ்சரைச் சிறுவரைப்
போர்வீ ரரைத் தூயரைப்
போதவும் பரிவோ டிதயஞ்செய்ய மிருபயன
புகழ்பெறக் கொள்வர் கண்டாய்
அவமதி தவிர்த்தென்னை யாட்கொண்டவள்ளலே
யண்ணலே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 93

## தருமம்.

றுமில்பெறுவித்தலொடுநாளோலைநாடொறும்
பிள்ளைக ளருந்திடும் பால்
பேசரிய சத்திரமடமா வுரிஞ்சுகல்
பெண்போக நாவிதன் வண்ணான்
ழைபொழிகனடிதண்ணீர் தலைக்கெண்ணெய்பசு
வாயினுறை பிணமடக்கல்
வாவியிறு முயிர்மீட்ட ழின்பொருளடைக்காய்
வழங்கல்சுண்ணாம்புதவுதல்
றையுருபவர்க்கமுது வெற்றிலங்கர்த்தல்பொழி
செய்தன் முன்னூலின் மனங்
திகழ்விலங் கூண்பிச்சை யறுசம யருக்குண்டி
தேவராலய மவுஷதம்
றைதல்கற் போர்க்கன்ன ராவெட்ட றங்களுமு
னன்னைசெய லருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீசுர தேவனே. 94

## இல்லறம்.

ந்தைதாய் சற்குருவை யிட்டதெய் வங்களைச்
சன்மார்க்கமுள மனைவியைத்
தவறாத சுற்றத்தை யேவாத மக்களைத்
தனைநம்பி வருவோர்களைச்
சிந்தைமகிழ்வெய்தவே பணிவிடைசெய்வோர்களைத்
தென் புலத்தோர் வறிஞரைத்

நீதிலா வதியைப் பரிவினுடைய துணைவுடை
தேனுவைப் பூசுரர் தமைச்
சந்ததஞ் செய்கடனை யொன்றுமிவை பிழையாது
தான்புரிந் திட லில்லறஞ்
சாருகல முடையராந் துறவறத் தோருமிவர்
தம்முடன் சரியாயிடார்
அந்தரி யுயிர்க்கெலாந் தாய்தனினு நல்லவட்
கன்பனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே.

## புராணம்.

தலைமைசேர் பௌடிக மிலிங்கமர்க் கண்டமெ
சாரும்வா மன மச்சமே
சைவம்பெ றுங்கூர்மம் வரும்வரா கங்காந்த
சரிதமே பிரமாண்டமும்
நிலைமைசேரிப்பத்து முயர்சிவ புராணமா
நெடியமால்கதை வைணவம்
நீதிசேர் காருட நாரதம் பாகவத
நீடிய புராண நான்காம்
கலைவலர்சொல் பதுமமொடு பிரமவகை வத்தமு
கமலா லயன் காதையாம்
கதிரவன் காதையே சூரிய புராணங்
கனல்காதையாக்கினேயம்
அலைகொண்ட நதியும்வெண் மதியுமறு கும்புனை
மத்தனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீசுரதேவனே. 9

## புகழ்ச்சி.

பருகாத வமுதொழுவர் பண்ணுத பூஷணம்
பாரின்மறை யாத நிதியம்
பரிதிகண் டலராத நிலவுகண் டலராத
பண்புடை பங்கேருகம்

புனாத புயல்கலைக ளருகாபு திங்கள்வெங்
கானிலுறை யாத சீயங்
கருதரிய விக்குணமனைத் துமுண் டானபோ
காசினியி லருமை யாகும்
செரியவுரையெய்யின்மொழி கீர்த்திவருகல்வி
சீதரிய மீகை வதனங் [யொடு
திடமான வீரமிவை யென்றறிகு வார்களிச்
செகமெலாங் கொண் டாடவே
நள்கற்ப தருவென்ன வோங்கிடுந் தானதுரை
யாகுமெம தருமை மதவே
னுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீசுரதேவனே. 97

## திருமாலவதாரம்.

ம
காமுகா சுரனைமுன் வதைத்தமரர் துயர்கெடச்
சுருதிதந் தது மச்சமாஞ்
சுரர்தமக் கமுதீந்த தாமையாம் பாய்போற்
சுருட்டிமா நில மெடுத்தே
.ரமிரணி யாக்கதனை யுயிருண்ட தேனமாம்
பொல்லாத கனக னுயிரைப்
போக்கியது நரசிங்க மூலகளந் தோங்கியது
புனிதவா மன மூர்த்தியாம்
மூறு மிராவணனை வென்றவ னிராகவ
னிரவிகுலம் வேரறுத்தோ
னேர்பரசு ராமன்வரு கண்ணனொடு பலராம
னிப்புவி பயந்த விர்த்தோர்
ஆமினிய கற்கியினி மேல்வருவ திவைபத்து
வரிவடிவ மருமை மதவே
னுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 98

## சிவமூர்த்தி

பிறைசூடி யுமைநேசன் விடையூர்தி நடமிடும்
பெரியனுயர் வதுதவ வடிவன்

பிச்சாடனன்காய தகனன்மற
பெம்மாள் புரந் தகித்தோன்
மறமலி சவந்தரனை மாய்த்தவன் பிரமன்முடி
வெளவினோன் வீரே சுரன்
மருவுநர|சிங்கத்தை வென்றவரபனுமை பாகன்
வன சரன் கங்கா ளனே
விறன்மேவு சுண்டேச ரக்ஷகன் கடுமாந்தி
மிக்க சக்கர முதவினோன்
விநாயகற்கருள் செய்தோன் குகனுமையுடன்
மினிரேசு பாதகன் சுகன் [சு
அறிவரிய தக்ஷிணா மூர்த்தியொ டிறங்கமா
மையனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீசுரதேவனே. 99

## கலிவணக்கம்,

மறரிதழி பைங்குவளை மென்முல்லை மல்லிகை
மருக்கொழுந் துயர் கூவிளம்
மற்றுமுள வாசமலர் பத்திரஞ் சிலசூடி
மணிமுடி தனிற் பொறுத்தே
சிலரெருக் கொடுவனத் துட்பூளை பச்சறுகு
செம்முள்ளி மலர் சூடவே
சித்தம்வைத் திடவுமங் கீகரித் திடுமகா
தேவ தேவ தெரிந்தே
கல்லவல றுரைக்குநன் கவியொடம் பலவான
கவிராய னுமென்புன்
கவியையுஞ் சூடியே மனமகிழ்ந் திடுவதுன்
கடனாகு மடனாகமும்
அலைபெரு கங்கையுஞ் செழுமதிய மும்புனை
மமலனே யருமை மதவே
ளனுதினமுமனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீசுரதேவனே. 100

அறப்பளீசுரசதகம் முற்றிற்று.

---